பவளக்கொடி
Directed by SRIRAMULU NAIDU



பவளக்கொடி

டைரக்ஷன்: எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு

நடிகர்கள்

டி. ஆர். மஹாலிங்கம்	...	கிருஷ்ணன், வேடன், பெண், வெட்டியான், வைத்தியன்.
டி. இ. வரதன்	...	அர்ஜுனன்
என். எஸ். கிருஷ்ணன்	...	ராமன்
டி. ஆர். ராஜகுமாரி	...	பவளக்கொடி
எம். எஸ். ஸரோஜினி	...	அல்லி
டி. ஏ. மதுரம்	...	ராமநவமி
குமாரி என். ராஜம்	...	பவளக்கொடியின் ஸகி, நாடக அர்ஜுனன்.
ஹரிணி	...	ருக்மிணி
மேனகா	...	ஸுபத்திரை
ரஜினி	...	பவளக்கொடியின் தாயார்
லலிதா - பத்மினி	...	நடனமாதர்கள்

கதை, வசனம்:— இளங்கோவன்

பாட்டுகள்: ... பாபநாசம் சிவன்
உடுமலை நாராயணகவி
கவிகுஞ்சரம்

ஸங்கீதம்: ... ஸுப்பராமன்

வாத்தியங்கள்: ... ஸுப்பராமன் கோஷ்டி

நடனம்: ... ராமய்யா பிள்ளை.

கோவை பக்ஷிராஜா ஸ்டுடியோஸ் தயாரித்தது.

நாராயணன் கம்பெனி வெளியீடு.

கதைச்சுருக்கம்

வெகுகாலமாக புத்திரபாக்யமற்ற சேரம்புராஜன், சிவ பெருமான் அருளால் பவளக்கொடியை மகளாக அடைகிருன். அழகு, வனப்பு, வீர்யம் இவைகளே உருக்கொண்ட பவள ராஜகுமாரி ஆண்வாடையே அணுகாத பெண்களின் ராஜ்யம் ஏற்படுத்துகிருள்.

அல்லியின் மகன் புலந்திரன் பவளத்தேர் வேண்டுமென பிடிவாதம் செய்கிருன். தன் பர்த்தாவான அர்ஜுனனைத்தவிர வேறு எவராலும் பவளத்தேர் கொண்டுவர முடியாதென்பதை உணர்ந்தாலும் தன்னை வெகுகாலம் மறந்திருக்கும் தன் கணவன் மீது அல்லிக்கு அடங்கா கோபம். எனினும், ஊண், உறக்க மின்றி மகன் வருந்துவதைச் சகியாத அல்லி தன் கணவனை வர வழைக்க நோயுற்றிருக்கும் புலந்திரனை வந்து காணும்படி லிகிதம் அனுப்புகிருள். மகனைக்காண ஓடோடியும் வந்த அர் ஜுனனைக் கண்டதும் கொடிய சீற்றமடைகிருள். விஜயனும் நடுங்குகிருன். பகவான் கிருஷ்ணன் தோன்றி இருவரையும் சமாதானம் செய்கிருர்.

புலந்திரனின் ஆசையை நிறைவேற்ற பகவானுடைய துணை கொண்டு பார்த்தன் பவளக்காடு சேருகிருன். இருவரும் பெண் வேஷம் பூண்டு பவளக்கொடியின் அரண்மனை செல்கிருர்கள். அச்சமயம் அர்ஜுனனையே பரிகசிக்கும் நாடகத்தை அனுபவித் துக் கொண்டிருக்கும் ராஜகுமாரி பவளக்கொடியின் ஈடிலா அழகில் மயங்குகிருன் காண்டீபன். தனக்கு அவளை மணம் செய்து வைக்கும்படியும் கண்ணனை மன்ருடுகிருன்.

அர்ஜுனனின் பணிதலுக்கிசைந்த பகவான், பவளக்கொடி வேட்டையாடும் சமயம் பார்த்து, அவனை ஓர் அழகிய அன்னப் பக்ஷியாக மாற்றி அவளெதிரில் விலை கூறுகிருன். பக்ஷியைக் கண்டு பரவசமடைந்த பவளக்கொடி வேண்டும்போது திருப்பித் தருவதாக வாக்களித்து, அன்னப்பக்ஷியை தன்னிடம் வைத்துக் கொள்ளுகிருள். இரவில் அர்ஜுனன் சுய ரூபங்கொண்டு ராஜ குமாரியிடம் காதல் புரிகிருன். அச்சமும் ஆத்திரமும் அடைந்த பவளக்கொடி மாயப்பக்ஷியின் ரகஸ்யத்தை அறியாமல் பரம சிவனைத் துதிக்கிருள். பகவான் தோன்றி இருவருக்கும் மணம் செய்வித்து ஆசீர்வதிக்கிருர்.

இன்பஸாகரத்தில் மூழ்கின அர்ஜுனன் அல்லியை அறவே மறக்கிருன். தேர் கொண்டுவரச் சென்றவர்கள் திரும்பாததைக் கண்ட அல்லி கடுஞ்சினங்கொண்டு பவளநாட்டின் மீதே படை யெடுக்கிருள். அர்ஜுனன் நடுநடுங்குகிருன். பகவானுடைய உபாயத்தால் அல்லியின் கோபம் தணிந்து பவளக்கொடிக்கும் அல்லிக்கும் சமாதானம் ஏற்படுகிறது. புலந்திரனுக்கும் பவளத் தேர் கிடைக்கிறது.

சுபம்.

பாட்டுகள்

1. ருக்மிணி :

ராகம் : சங்கராபரணம்

தாளம் : ஆதி

நான்—உனது புகழ் பாடுவேன் தேவ
உனது புகழ் பாடுவேன் ஸ்ரீ
துளசி என்னுள்ளம் கனிந்தென்னுளு
(நான்

வானவர் வணங்கும் உயர் தெய்வமே
நின் தெரிசனம் ஆனந்தமே தேவி
(நான்

நாரணன் மாதேவன் (உன்) மேனியில் தாங்கும்
ஆரணம் சொல் காமதேனுவே வந்து
காரது போல் இன்ப மாரி பெய்யும் நற்
கருணை வடிவே தன் நிகரில் புனிதே வரதே அடிமை
(நான்

2. கிருஷ்ணன் :

ராகம் : வாசஸ்பதி

தாளம் : ஆ

நித்தமும் ஆனந்தமே—இங்கே தான்
நேர்வது கண்டே கொண்டாடுது பாரெல்லாம் (நி

நேர்வது கண்டே கொண்டாடும் பாரெல்லாம் (நி

சித்திரப்பெண் போலே குயில் பாடவே
தென்றலில் மோதிடும் ஸங்கீதம் போல் இங்கேதான் (நி

பார்வையில் குளுமை—பனிமொழியிலினிமை அன்புப்
பார்வையில் குளுமை—பனிமொழியிலினிமை
பாங்கிமார்கள் நிற்கின்ற அருமை
பார்க்குமிடமெல்லாம் தூய்மை—ருக்மிணிதேவி—மனேயி
பார்க்குமிடமெல்லாம் தூய்மை—ருக்மிணி
பகலும் இரவும் மனம்
பரவசம் பெற இங்கே (நி

3. பவளக்கோடி தாயார் :

ராகம் : செஞ்சுருட்டி தாளம் : திச்ரம்



கண்ணே என் கண்மணியே
கல்பகமே தாலே லோ
கனிவாயின் முத்தம் தரும்
அத்புதமே தாலே லோ (கண்)

கன்னம் குழியக் குளிர் இளநகை சிந்தும்
இரு கன்னம் குழியக் குளிர் இளநகை சிந்தும்
கலைமதியே வளரும் எங்கள்
குலக்கொடியே தாலே லோ (கண்)

மன்னவரும் வளம் மிகுந்த இம்
மலைநாடும் செய்த உயர்—எங்கள்
மன்னவரும் வளம் மிகுந்த இம்
மலைநாடும் செய்த உயர்த்
தவப்பயனே, கவலை தணித்த
பவளக்கொடியே வாராயோ (கண்)

4. பவளக்கோடி :

ராகம் : பிலஹரி தாளம் : ஆதி

மயில் போல ஆட எனக்காவலடி
மனதில் குதூஹலம் கண்களுக் கானந்தம் இந்த (மயில்)

ஒயிலாக நடந்து உலகை மறந்து
ஒரு கவலை யில்லாமற் தோகை விரித்து (மயில்)

வண்டுகள் ஸ்ருதியோடு வனதேவதை
கண்டு களிக்க இன்பக் குயில்களின் இசையுடன் (மயில்)

தாளம் : ரூபகம்

களங்கமற்ற தண்டாமரைப் பூந்தடாகம் இதில்
கண் குளிர மலர்ந்த கமல மலர்களின் கந்தம்
பளிங்கு மேடை குளிர்ந்த தென்றல்
எத்தனை இன்பமடி இங்கு
பாடி ஒன்றுகூடி ஆடுவோம் வாரீர்
பாங்கியரே கூடியோடி ஆடுவோம் வாரீர்

5. அல்லி :

ராகம்: ஷண்முகப்பிரியா தாளம்: ஆதி

சரவணபவ என்னும் திருமந்திரம் தன்னை
ஸதா ஜபி என் நாவே — ஓம் (சரவ)

புரமெரித்த பரமன் நெற்றிக் கண்ணிலுதித்த
போத ஸ்வரூபன் பொற்பாதம் தன்னைப் பணிந்து (சரவ)

மண்மிசை கிடந்துழல் பிறவிப்பிணியைத்தீர்க்கும்
மாயை அகலப் பேரின்ப நெறியில் சேர்க்கும்
தண்மதி நிகர் குளிர் கருணை நிலவு மீறும்
ஷண்முகப்ரிய ஷடாக்ஷர பாவன (சரவ)

6. அல்லி :

ராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்

எனது அன்பர் விஜய பூபன்
என்றே வருவாரோ (எனது)

அனலினும் என் தனிமை நோய்க்கு
மருந்து தான் தருவாரோ
எந்நாள் வருவாரோ (எனது)

சுபத்திரை த்ரௌபதி முதல் பல்
மனைவியர்கள் அவருக்குண்டு
விசும்பின் மாரிக்(கே) ஏங்கி வாடும்
பசும் புல் போலும் என்றன் உள்ளம்
மிக வருந்த மகனையும் ஐந்தாண்டிலும்
மறந்தாரே! அன்பில் சிறந்தாரே (எனது)

7. புலந்திரன் :

ராகம் : மிச்ர பீம்ப்ளாஸ் தாளம் : திச்ரம்

உல்லாஸமாக நாம் பாடுவோம் —,
ஓடோடி விளையாடத் தானே நாம் (உல்)

ஆஹா—என்ன—ஆனந்தம் இதுவேளை
அழகான பவழ ரதம் கண்டேனிங்கே
கவலையும் தீர்ந்தது மனசு போலானது
காரியமே ஜெயமானது ஆஹா நாமே (உல்)

நானிப்போதே பையன்கள்
மமதையெல்லாம் ஒடுக்கிறேன்
ராணி அல்லி பாலகன்—நான்
ராணி அல்லி பாலகன்
ராஜ சிங்கக் குட்டிதான்—ஓடோடி

எனது பவழத்தேருக்கு முன்
இவர்கள் தேர் எம்மாத்திரம்

இனிமேல் நான் விடவு மாட்டேன்
எனக்கு வருது ஆத்திரம்

8. ஸுபத்திரை—அர்ஜுனன் :

ராகம் : விஜயநகரி தாளம் : ஆதி

அர்ஜு. உலகினை மறந்தே நாம் பாடுவோம்
ஒருயிராய் என்றும் — அன்பே (உலகி)

ஸுபத். என்னுடல் ஆவியும் உமதே — காதல்
இன்பம் தரும் நாத அமுதே

அர்ஜு. அன்பில் இழைந்த நமக்கிணையுண்டோ
ஆரணங்கே இனிப்பிரிவுண்டோ

ஸுபத். விண்ணில் தவழும் மதிவதனா

அர்ஜு. திரு — நாரணன் தந்த குமாரி

இருவரும்: ஸ்ரீதரன் கருணை என்னும் ஊஞ்சலில்
காதல் தென்றல் பெற ஆடிடுவோம்

9. நடனமாதர்கள் :

ராகம் : ஆனந்த பைரவி தாளம் : த்ரிபுட

ஆண் — கொஞ்சும் கிளியே இன்னும்
தகுமோ பராமுகம் என்மேல் (கொ)

நெஞ்சம் நினைந்து ஏங்கி
விரைந்தோடி வந்தேன் இங்கென் கண்ணே (கொ)

பெண் — யாரிடம் இந்த மிரட்டல் நில்லும் நில்லும்
போதுமைய வந்த வழி செல்லும் செல்லும்
ஊரெல்லாம் அறியும் உங்கள் தில்லும் முல்லும்
துளி மானமும் வெட்கமும் இன்றி பூனைபோல
வந்து நின்று (யா)

ராகம் : கமாஸ் தாளம் : ஆதி

ஆண் — இந்த மோடி செய்யலாகுமோ
மானே மனம் சினந்து கண்சிவந் (திந்த)

மனமோஹனுங்கியுனது காதல்
மோஹம் கொண்டு வாடினேன் (இந்த)

ராகம் : ஸிந்து பைரவி தாளம் : ஆதி

பெண் — காரியம் ஆகு மட்டும் இப்படிப்
பசப்புவதுங்கள் வித்தை — உத்தம
நாரியர்கள் ஸ்வரூபத்தை இன்று
காண்பீர் பெரியவரே

ராகம் : ஸிந்து பைரவி தாளம் : திச்ரம்

பெண் — மோசக்கார புருஷர்களைக் கட்டி
அடிப்பேன்

முழு................................
இன்னும் மோசம் போவேனோ இவரிடம்
நேசம் வைப்பேனோ...............குடி
வெறியரையும் காம வெறியரையும்
நம்புதல் மண் குதிரையை நம்பி
ஆற்றில் இறங்குதல் போல

10. அர்ஜுனன் :

ராகம் : மாயா மாளவகௌளை   தாளம் : ரூபகம்

உனதருள் அல்லால் ஒரு
துணையில்லை கண்ணா எனக்
(உனதருள்)

எனது பிழை ஏதாயினும் உன்
மனதில் வையாதே யது
பதியே இனி என்னை
சோதனைகள் செய்யாதே (உன)

ஸனகாதியர் தொழும் உன்னை நான்
மறந்ததும் உண்டோ
எனது தோழன் எனது தெய்வம்
எல்லாம் நீயன்றோ இத்தருணம்
என்னைக் கைவிடாதே ஆபத்
பாந்தவன் நீயன்றோ எனக்
(உனதருள்)

11. கிருஷ்ணன் :

ராகம் : குறிஞ்சி (சம்மேளனம்)   தாளம் : திச்ரம்

விஜய காண்டீப வீரா
வினய குண கெம்பீரா (விஜய)

புஜபல............தீரா
போற்றுமு............தாரா
புண்ய சொரூப ஞான காரா
புகழ் பெறும் பாண்டுவின் குமாரா (விஜய)

நல்ல — பாக்யவான் நீ அர்ஜுனா — எந்நாளும்
பாவையர் நேசிக்கும் மாமோகனா.........
சூழும் விண் மீன் மாமதி போலும்
தோகையர் சூழவாழும் உன் போலே
சுகிப்பவர் யாருண்டு பூ மீதிலே (விஜய)

12. அல்லி—அர்ஜுனன் :

ராகம் : யதுகுல காம்போதி தாளம் : ஆதி

அர்ஜு. — சினந்து சிவந்த உனது முகமும்
செந்தாமரை போல் அழகே — கண்ணே
சினந்து சிவந்த உனது முகமும்
செந்தாமரை போல் அழகே

அல்லி — பேதை கனிந்த காதலில் களங்கம் ஓர்சிறு
கனவிலும் இல்லை ஸ்வாமி

ராகம் : காபி

அர்ஜு. — குழந்தைப் பருவத்துன்றன் முறட்டுத்தனமும்
பிடிவாதமும் எப்போதான் மாறுமோ

அல்லி — உங்கள் குழந்தையைப் பார்க்கவும் ஆசை மறந்த
உங்கள் கல்நெஞ்சம் என்றென்மேல் இரங்குமோ

அர்ஜு. — எல்லாம் மறந்திடுவாய் கண்ணே

அல்லி — என்னை மன்னித்தருளும் ஸ்வாமி

இருவரும் - பிரிந்தோர்கள் ஒன்று கூடும்
இன்பந்தன்னைப் பேச ஒரு
பாஷை உலகில் உண்டோ

13. பவளக்கோடி :

ராகம் : மாண்டு தாளம் : ஆதி

மாலையில் உல்லாஸமாய் நாம்
வாழ்வதுதான் யோகம்
வாளேந்தும் வீரர் போலே
வாழ்வதும் நாமே — அன்பின்
மாதர்கள் நாமே — (மாலை)

வாணிபமே செய நாமறிவோமே
நன்றாய்ப் பாடுவோமே
வீணையிலே நாமே கலைவாணி
மேலும் புவிமேல் ராணி
மானமும் பெரிதாய்ப் பேணி
வாழ்வதும் நாமே — அன்பின்
மாதர்கள் நாமே — (மாலை)

14. நாடக அர்ஜுனன் :

ராகம்: காபி தாளம் : ஆதி

காண்டீபன் மைத்துன காளிங்க நர்த்தன
காத்தருள் சம்வர்த்தன நற்கோ வர்த்தன (காண்)

தூண்டிமுள் மீனது போல் துடித்திடும் பக்தர்களை
ஆண்டிடும் ரக்ஷகனே — கோபாலனே (காண்)

வானவர் வணங்கிடும் மாமணிவண்ண
மாதவா உயர்பெரும் ஜெகன்மோகன
வருவாய் துணையாய் தாமரைக் கண்ண
ராதையின் மனமோகன அதிரமண (காண்)

15. பவளக்கோடி :

ராகம் : கமாஸ் தாளம் : ரூபகம்

ஆசை வார்த்தை யாடலாகுமா
அம்மான் போலே பெண் மானிடம் — (ஆசை)

வாசவன் துணையாளி வல்லவன் வில்லாளி
காசினி மேல் யா னென்று
காரிகை யென்னிடம் தகாத பல (ஆசை)

பாண்டியன் குமாரி அல்லி
பாவை யென்று எண்ணி வந்து
பவளக்கொடி தனையறியாமலே (ஆசை)

தாரணியில் மனித குணமி —
தா — மிருக முறமையும் தகு —
மா — தருமம் இதுவல்ல நிஜ
மாக யினி — நீ உனது
ஜாலமதை எனது வகையில் —
தகாது செய்ய கெடுதி விளையுமொரு (ஆசை)

16. நாடக அர்ஜுனன் :

ராகம் : ஸிந்துபைரவி தாளம் : ஆதி

நானே வேண்டினேன் —
உனக் கனிவாய் — (நானே)
மான்விழியே செந் தேன் மொழியே
வீணேன் பழியே உற வாடிடமானே — (நானே)
மாமதனாலே வாடி நொந்தேனே
வாதனை யேனின்னும் வீணே—தயவு செய்
வாதனை யேனின்னும் வீணே—இந்த
மாலை வேளை தனில் — (நானே)

தொகையரா

சல்லாப சிங்கார ராணியே மோகனச்
சரஸ ரதியே என் கண்ணே
உல்லாஸ மாயிங்கு வந்தணைத்தோர் முத்தம்

பாட்டு

உதவிடுவாய் தெய்வப்பெண்ணே — முத்தம்
உதவிடுவாய் தெய்வப்பெண்ணே — என்
உளத்தில் உதிக்குமுனே — நானே

17. அர்ஜுனன் :

ராகம் : புன்னாகவராளி தாளம் : ஆதி

பவளக்கொடி மாதை நான்
பார்த்தவுடனே—அந்தப்
பாவை மேல் ஆசை கொண்டேன் —
ப்ரேமையுடனே (பவள)

அவளுக்குள்ள அழகு —
எவளுக்கும் இல்லை இல்லை
உவமானம் சொல்லக்கூட —
ஒன்றுமே சரியில்லை (பவள)

அனலிற் பிறந்தவளை —
அல்லியில் உதித்தவளை
மனம் ஒப்பி சேர்த்து வைத்த —
மாயபிரானே கண்ணா— (பவள)

18. கிருஷ்ணன் :

ராகம்: காபி தாளம்: ஆதி

ஞாயமல்லவே அர்ஜுனா—நான்
சொல்வதைக்கேள் (ஞாயமல்லவே)

எட்டு நாளில் வாரேனென்று
இயம்பினாய் அல்லி முன்னே
ஏனோ அதை நீ மறந்தாய் —
அறிவிழந்தாய் (ஞாயமல்லவே)

பெண்ணென்ற ரூபங்கண்டால்
பேயைப்போல் தவிக்கின்றாய்
உன்னோடு வந்ததே தப்பு —
அவமதிப்பு— (ஞாயமல்லவே)

19. கிருஷ்ணன் :

ராகம்: ஸிந்துபைரவி தாளம்: ஆதி

ஓ...............அம்மா...............
அன்னம் வாங்கல்லையோ — அம்மா
அன்னம் வாங்கல்லையோ

ஆதியில் தமயந்தி தேவி—கொண்ட
ஆசைக் கூண்டிலே மேவி
காதலனோடே கூடியே வாழத்
தேடியதோர் சஞ்சீவி (அன்னம்)

வாணிதேவி வரும் பவனி வாகனம்
இங்கே யாருமிதை நேரே
மகளிரோடு விளையாடவே நாடும்
இதோ வாங்க வருவீரே — இதால்
சுகானந்த மடைவீரே (அன்னம்)

வானமீது பறந்தோடும் — நெடு
வானமீது பறந்தோடும் —
மயில் போலே சோலை நாடும்
இதனாலே யோகமே
துயர் போகுமே
நல்ல ஸ்நேகமாமே (அன்னம்)

ஆடியே இது நடந்தாலே — புது
ஆசை தோணுமுன்னாலே
ஈடிது போலே ஏதினிமேலே
ஆதலினாலிந் நாளே — (அன்னம்)

20. பவளக்கோடி :

ராகம் : காபி தாளம் : ஆதி

ஏதோ ஒரு ஆனந்தம் இன்றென் மனதில்
எங்கிருந்தோ வந்து பாயுதே
தாதியருடன் விளையாடுவதில் ஒரு
ஆவலில்லை ஈதென்ன புதுமை (ஏதோ)

ராகம் : செஞ்சுருட்டி

என் இன்ப வெள்ளன்னமே ஒருகணம்
உன்னை விட்டுப் பிரிய முடியாது
இன் சுவை பாலும் தீங்கனியும்
வேண்டுமட்டும் நான் தருவேன் (ஏதோ)

ராகம் : பியாக்

ஏமாற்றிவிட்டு எங்கும் ஓடாதே அன்னமே
என் செல்லமே என்னுள் ஆனந்த விதையே
வா வா உன்னுடல் நோகாமலே
என்னுடன் நீ கண்வளராய் (ஏதோ)

21. அர்ஜுனன்—பவளக்கோடி :

ராகம் : சாருகேஸி தாளம் : திச்ரம்

அர்ஜு. அன்னமே உன் ஆசையாலே
அன்னமாகினேன் பெண் (அன்னமே)

பவள. அன்பரே நான் உமது ஆசை
அன்னமாகினேன்

அர்ஜு.—பவள.
இன்று நாமும் ப்ரேமையாலே
ஏகமாகினோம் மனம் (ஏக)

பவள. புது நிலாவைக் காணும் கடல்
போலே ஆனேன் பூவை நான்

அர்ஜு. பூவொடு மணம் மேவிய விதம்
பூலோகந்தனில் வாழ்வோம் (இன்று)

பவள. மது நான் அதன் சுவை நீர்தான்
மகிழலாம் இன்றே மெய்க்காதலினால்

அர்ஜு. மயிலே எனதோர் மாதவம் நீயே
உயிரும் உடலும் நாமே

அர்ஜு.—பவள.
சுதி கூடும் மகரயாழொடு நாதமும்
துணை சேர்ந்து இசை ஆதல் போலே
(இன்று)

22. கோரஸ் : ராகம் : கஜல்

இனி நம்மோடெல்லாம் இந்த ராணி
பேசுவளோடி வா போகலாமடி—இனி

செவ்விதழ் போலே புதிதாய் இங்கே
இரு கண்ணும் சிவந்ததும் ஏனோ?.........

ராத்திரியெல்லாம் கண் தூங்காமல்
கொஞ்சம்
ஊஞ்சலாடினுள் —
இனி நம்மோடெல்லாம் இந்தராணி
பேசுவளோடி வா போகலாமடி

வண்ணப் பால் முகமீதே காணும் ஓர்
சிறு வடு ஏன் சொல்
ஊஞ்சலிலே படவே தானே ஆனது
மானே
வண்ணப்பால்...............

விநோதமாய் பேசாதே இதை யறிவேன்
பால் — பானைக்குங் காவல்
இவள் — பூனைக்குங் காவல்
வாடி பேசாமல் ஒன்ருய்ப் போகலாமடி

இனி நம்மோடெல்லாம் இந்த ராணி
பேசுவளோடி வா போகலாமடி

23. கிருஷ்ணன் :

ராகம் : கேதாரகௌளை தாளம் : கண்டசாபு

இவனலே ஓயாத தொல்லை — என்ன
செய்தாலும் ஒரு நாளும் நல்லபேர் இல்லை (இவ)
பெண்ணென்று சொன்னலும்போதும் — சொன்ன
படியெல்லாம் கேட்பான் பல்லை இளிப்பான்
கண்ண என்றென்னையும் வதைப்பான் — சுத்த
அம்மாஞ்சியாக்கிக் குரங்காட்டி வைப்பான் (இவ)

ராகம் : தேஷ்

வருஷத்திற் கொரு பெண்ணை விரும்பி — ஏங்கி
கொட்டாவி விட்டென்னைத் துணையாள் பிடிப்பான்
புருஷனைப் போல் வேஷமிட்டான் — முடவன்
எட்டாத கொம்புத் தேன் ஆசை விடமாட்டான் (இவ)

ராகம்: ஸிந்துபைரவி

திருடனைப் போலே விழிப்பான் — தூக்கி
விட்டாலும் எலிபிடிக்கத் தெரியாத பூனே
குருடனே சந்தைக் கனுப்ப — பிறகு
எட்டாள் மெனக் கெடணும்—இவன் ஒரே சாக்ஷி (இவ)

24. அர்ஜுனன் :

ராகம்: பியாக் தாளம்: ஆதி

நாடக சூத்திர தாரி — இவர், கபட — ஜகன்
நாயகன் கிரிதாரி முராரி — (நாடக)
ஆடலெல்லாம் பரமானந்தம் — பாரில்
ஆயிரம் பேர் இவர் பாரி — பதினுயிரம் பேர்
ஓடையிலே பெண்கள் ஆடையை வாரி — நீர் ஓடை
ஓடிய பேருபகாரி — எடுத்தோடிய பேருபகாரி (நாடக)

ராகம்: மோஹனம் தாளம்: கண்டசாபு

கண்ணடிக்கும் நாஞேர் காமி—பெண்ணே— (கண்)
அந்த
கலேக்கு இவர் தான் குருஸ்வாமி—இவர்
தன்மையை ருக்மிணி பாமை இடம்
உண்மையைக் கேட்டிடலாமே (கண்)

25. அல்லி :

ராகம்: ஸிம்மேந்த்ரமத்யமம் தாளம்: ஆதி

எனது பிழை யெல்லாம் மன்னித்தருள்
என்றன் அன்னேயே உமையே மீனுக்ஷி (எனது)
உனது மலர்ப் பாதம் கனவிலும் மறந்ததுண்டோ
கை விடுவதும் நன்ருே அம்பா (எனது)
ஒரு நாளும் தோல்விகண்டறியாத என் படை
உருக் குலேந்துயிர் சோர்ந்ததே
அரவங்கள் பணியாக அணிந்த அம்மா — என்
கருவத்திற்கிது பரிசோ தாளேன் தேவீ......தேவீ.........

26. கிருஷ்ணன் :

ராகம்: தெம்மாங்கு தாளம்: திச்ரம்

அர்ச்சுன மகராஜனிறந்தார்
கொடுமை கொடுமை (அர்ச்)
யாருமற்ற அனதை போல
எங்கிருந்தோ இங்குவந்த (அர்ச்)
பாண்டவரிலே வீரனும் — வீமனுக்கு
தம்பியாம்
காண்டீபக் கைவில்லனும் கண்ணனுக்
குத் தோழனும் (அர்ச்)

அழகிலுயர்ந்த புருஷனும்
அல்லிராணி கணவனும்
பக்கத்திலொரு துணையில்லாமல்
திக்கற்றவராய்த் தலைவிதியோ
(அர்ச்)

27. கிருஷ்ணன் :

ராகம் : முகாரி விருத்தம்

வென்றி கொள் வீர மங்கை
மென் கொடி அல்லி மாதே
இன்றுனதின்னுயிர்க்கு எழில் நாயகன்
இவரை மீண்டும்
உன்றனக்குதவ வேண்டில்
உன் தலை வணங்க வேண்டும்
சென்றதை மறந்து உந்தன்
சினமெலாம் அடங்க வேண்டும்

28. புலந்திரன் :

ராகம் : பீம்ப்ளாஸ் தாளம் : திச்ரம்

உல்லாஸமாகவே ஆடுவேன் பவளத்
தேரோடு ஓடோடி நாளும் நானே (உல்)
வில்லாளன் தவபாலன் இவனென்றே
எல்லோரும் புகழ ரதம் விடுவேனென்றே
என தொரு தோழரும்
இணை யொடு குழவும்
ஏளனமே செய்தவர்கள் முன்னே நாளும்

(எல்லோரும்)
உல்லாஸமாகவே பாடுவோம்
உள்ளன்பு மாருமல் மாயன் தன்னை (உல்)

(பவளக்கோடி)
காதலன் விஜய காண்டீப வேளை
காணவும் அருளிய கார் வண்ணனை

(அர்ஜுனன்)
ஆதரவாக ஐவர் தம்மீது
அன்புறும் பூங்கண்ணனை

(அல்லி)
அண்ணனை ஆதவர் பாடியில் மேவும்
மன்னனை எங்கள் மாதவனை நாளும் (உல்)